**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**மூன்றாம் ஆண்டு – ஐந்தாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி – பிப்ரவரி – 2020**
**D031 இலக்கணம் – 4 (யாப்பு, அணி)**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. தொல்காப்பியர் செய்யுள் உறுப்புகளாகக் கூறுவன எத்தனை?
2. அளபெடுக்கும் மெய்கள் யாவை?'
3. கனிச்சீரின் வேறு பெயர் யாது?
4. தளையின் பெரும் பிரிவுகள் எவை?
5. செப்பலோசை எத்தனை வகைப்படும்?
6. கலிப்பாவில் இடம் பெறும் உறுப்புகள் யாவை?
7. இடைமடக்கு என்றால் என்ன?
8. கோழி எறிந்த கொடுங்கால் கனங்குழை – இது எந்தப் பாவுக்குரிய அடி?
9. குளகச் செய்யுள் இடம்பெறும் நூல்கள் இரண்டினைக் கூறுக.
10. காப்பிய முகப்பு எவ்வாறு அமையும்?
11. செய்யுள் நெறியின் இருவகைகள் யாவை?
12. சமாதி குறித்துக் கௌடர் தம் கருத்து யாது?

13. உவமை அணியிலிருந்து தோன்றிய முதல் அணி யாது?

14. பிறிது மொழிதல் அணிக்குத் திருக்குறள் ஒன்றைச் சான்று காட்டுக.

15. மானைப் புகழ்வது யாருக்குப் பழிப்பாயிற்று?

**பிரிவு – 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. பஃறொடை வெண்பா – பெயர்க்காரணம் தருக.
2. ஓரொலி வெண்டுறை, வேற்றொலி வெண்டுறை – வேறுபாடு காட்டுக.
3. நால்வகைப் பாக்களுக்கான சிற்றெல்லை அல்லது அடிச்சிறுமையைக் குறிப்பிடுக.
4. கூழை என்பதன் பொருள் யாது?
5. இயைபு உருவகம், இயைபு இல் உருவகம் – இவற்றின் இலக்கணம் தருக.
6. பொருள் பின்வருநிலை அணி என்றால் என்ன?
7. தண்டியாசிரியர் குறித்தும் தண்டியலங்காரத்தின் சிறப்பும் பற்றி எழுதுக.
8. காப்பியங்களில் இடம்பெறும் அகப்பொருள் நிகழ்ச்சிகள் யாவை?

**பிரிவு – 3**

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) அசையின் வகை, சீரின் வகை, சீர்கள் பெறும் பலவகைப் பெயர்கள் ஆகியவற்றை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) சீரடிகளின் வகைகள், அவற்றிற்கான பெயர்கள், அப்பெயர்கள் வர காரணங்கள் பற்றி விளக்குக.

2. (அ) ஒழிபியல் கூறும் எழுத்துப் புறனடையை விளக்குக.

(அல்லது)

(ஆ) அணி இலக்கணமும் ஐந்திலக்கணமும் குறித்து எழுதுக.

3. (அ) தொல்காப்பியத்திற்கும் தண்டியலங்காரத்திற்கும் இடையிலான ஒப்புமைக் கூறுகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) ஒட்டு அணி, அதிசய அணி, தற்குறிப்பேற்ற அணி, ஏது அணி ஆகிய அணிகளுக்குத் தண்டியலங்காரம் கூறும் இலக்கணத்தை எழுதுக.

***